**சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.**

**O.S.No: 89/2013** **தேதி: 09.06.2026**

**வா.சா. 1 – நாகையா**

**(1–ம் பிரதிவாதி தரப்பில் 2 முதல் 20 மற்றும் 23, 25 முதல் 33 மற்றும் 36 முதல் 38 பிரதிவாதிகள் தரப்பில் ஏற்கனவே செய்யப்பட்ட குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார்)**

**<u>1–ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>:–**

வழக்கு சொத்துக்கள் எனது தாயாரின் பூர்வீக சொத்துக்கள் என்று சொல்லி தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனது அப்பா முத்துக்கிருஷ்ணனின் சொந்த ஊர் திண்டுக்கல் மாவட்டம், வத்தலகுண்டு என்றால் சரிதான். வழக்கு சொத்துக்கள் எனது அப்பா வழியில் எனக்கு அவரின் பெற்றோரிடமோ அல்லது அவரின் பூர்வீகத்தில் கிடைக்கப்பெற்ற சொத்துக்கள் கிடையாது என்றால் சரிதான். எனது அம்மா கஸ்தூரியம்மாள் தான் இவ்வழக்கின் முதல் வாதியாக இருந்து தற்போது இறந்துவிட்டார் என்றால் சரிதான். வழக்கு சொத்துக்கள் எனது அம்மாவின் பெற்றோரிடமிருந்து பூர்வீக அடிப்படையிலோ அல்லது ஆவணங்களின் அடிப்படையிலோ எனது அம்மாவிற்கு கிடைக்கவில்லை என்றால் பெரியம்மா வழியில் வந்த சொத்து. எனது பெரியம்மாவின் பெயர் நாகம்மாள் என்றால் சரிதான். நாகம்மாளின் கணவர் பெயர் முத்துக்கிருஷ்ணன். நாகம்மாளும், எனது அம்மா கஸ்தூரியம்மாளும் சகோதரிகள் என்றால் சரிதான். வழக்கு சொத்து நாகம்மாளுக்கு அவரது பெற்றோர்கள் கொடுத்தது கிடையாது என்றும், நாகம்மாளின் கணவர் முத்துக்கிருஷ்ணனின் பூர்வீக சொத்து என்றும் சொன்னால் சரிதான். முத்துக்கிருஷ்ணனும், 1–ம் பிரதிவாதியின் அப்பாவும் உடன்பிறந்தவர்கள் என்றால் சரிதான். முத்துக்கிருஷ்ணன்–நாகம்மாள் தம்பதியினர் வாரிசு

இல்லாமல் இறந்துவிட்டார்கள் என்றால் சரிதான். முத்துக்கிருஷ்ணன்–நாகம்மாள் தம்பதியினர் வாரிசு இல்லாமல் இறந்த காரணத்தினால் 1–ம் பிரதிவாதியும், வாதிகளான நாங்களும் மேற்படி தம்பதிகளுக்கு வாரிசுகள் என்ற அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். இந்து வாரிசு உரிமைச் சட்டப்படி ஆண் ஒருவர் வாரிசு இன்றி இறக்கும் போது அவருடைய தாயார், உடன்பிறந்தோர் மற்றும் தகப்பனார் என்ற அடிப்படையில் தான் வாரிசு உரிமைக்கு முன்னுரிமை உண்டு என்றாலும், அவ்வாறான வாரிசுகள் இருக்கும் பொழுது இறந்த ஆணின் மனைவி வழியில் வாரிசுரிமை ஏற்படாது என்றாலும் சரியல்ல. எனது அம்மா கஸ்தூரியம்மாளுடன் உடன் பிறந்தவர்கள் மொத்தம் எத்தனை பேர் என்றால் எனது தாயாருடன் சேர்த்து மூன்று நபர்கள். கஸ்தூரியம்மாள், நாகம்மாள் மற்றும் ரெங்கம்மாள் ஆகியோர்கள். ரெங்கம்மாளுக்கு வாரிசு இல்லாமல் இறந்துவிட்டார். வழக்கு சொத்துக்கள் குறித்து ஏற்கனவே முன் வழக்குகள் ஏற்பட்டது என்றாலும், அந்த வழக்கு நடவடிக்கைகளில் 2–ம் பிரதிவாதி வேலுச்சாமி வாதியாக இருந்தும், இவ்வழக்கின் 1–ம் பிரதிவாதி மற்றும் வாதிகளான எங்களை பிரதிவாதிகளாக சேர்த்து, வழக்கு நடவடிக்கை ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வழக்கு நடவடிக்கையில் வேலுச்சாமிக்கு ஆதரவாக தீர்ப்பு வந்த போது மேல்நடவடிக்கைக்கு இவ்வழக்கின் அழகர்சாமி மட்டும் தான் மேல்முறையீடு செய்தார் என்றும், எங்கள் தரப்பில் யாரும் மேல்முறையீடு செய்யவில்லை என்றால் எனது அண்ணன் உயிருடன் இல்லை, ஆதலால் அழகர்சாமி மேல்முறையீடு செய்தார். எனது அண்ணன் 2002–ம் ஆண்டு இறந்தார். இவ்வழக்கின் 1–ம் பிரதிவாதி முன் வழக்குகளில் என்னுடைய வழக்கினை ஒத்து வழக்கு நடத்தவில்லை என்றும், சாட்சியம் அளிக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. முன் வழக்கு நடவடிக்கையில், வழக்கு சொத்தினை நீதிமன்ற ஆணையர் மூலமாக அளவிட சென்ற போது வேலுச்சாமி குடும்பத்திற்கும், அழகர்சாமி குடும்பத்திற்கும் அடிதடி சண்டை ஏற்பட்டது

என்றால் வேலுச்சாமி குடும்பத்திற்கும், நடராஜன் குடும்பத்திற்கும் அடிதடி சண்டை ஏற்பட்டது. மேற்படி சம்பவம் சம்பந்தமாக எனது அண்ணன் நடராஜன் புகார்தாராக இருந்து வேலுச்சாமி குடும்பத்தார் மீது சட்ட நடவடிக்கை மேற்கொண்டார் என்றால் சரியல்ல. நடராஜன், வேலுச்சாமி குடும்பத்தார் மீது குற்ற வழக்கு நடவடிக்கை மேற்கொண்டார் என்றும், அந்த குற்றபுகார் சங்கதியிலோ, வழக்கு சொத்துக்களை 1–ம் பிரதிவாதி அழகர்சாமியின் சொத்துக்கள் என்று குறிப்பிட்டுத்தான் புகார் கொடுத்துள்ளார்கள் என்றும், அதை ஒத்துக்கொண்டால் வழக்கிற்கு பாதகமாக அமையும் என்று மறுத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. முன்வழக்குளில் தாவா சொத்து அழகர்சாமியின் சொத்துக்கள் என்று ஒப்புக் கொண்டு, தற்போது கெட்ட எண்ணத்தில் தாவா சொத்துக்கள் என்னுடையது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அருப்புக்கோட்டை மாவட்ட உரிமையியல் நீதிமன்ற வழக்கு எண்.195/2012 என்ற வழக்கில் எனது குடும்பத்தார் தோன்றாத்தரப்பினர்களாக இருந்துவிட்டு, உரிய முறையில் அதற்கான மேல்நடவடிக்கை எதும் செல்லாமல், அதன் மேல்முறையீட்டு நீதிமன்றமான இந்நீதிமன்றத்தில் 1வது பரிகாரமாக கோரியுள்ளது ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல. நான் எந்த வகையிலும், 1–ம் பிரதிவாதிக்கு பங்காளி முறை என்று கோரமுடியாது என்றால் சரியல்ல. நாங்கள் கூட்டுக் குடும்பமாக வசித்து வந்தோம். OS.195/2012 வழக்கு நடவடிக்கையில் இவ்வழக்கின் 1–ம் பிரதிவாதி, அதில் மற்ற பிரதிவாதிகளாக இருந்த எங்கள் குடும்பத்தாரரை ஏமாற்றி வேலுச்சாமி குடும்பத்தாருடன் சமாதானமாக சென்றுவிட்டார் என்று சொல்லிருப்பது பொய்யான சங்கதி என்றால் சரியல்ல. எனது குடும்பத்தார், அழகர்சாமிக்கு மேற்கண்ட வழக்கை எங்கள் சார்பாக நடத்த அதிகார ஆவணமோ, அல்லது வக்காலத்து வழங்கவில்லை என்றால் சரிதான். அழகர்சாமி குடும்பத்திற்கும், எங்கள் குடும்பத்திற்கும் எப்போதும் பாகப்பிரிவினை ஆவணம் ஏற்படவில்லை என்றாலும், முன்வழக்குகளில் இவ்வாறான

சங்கதியை குறிப்பிட்டு வழக்கு நடத்தவில்லை என்றாலும், தற்போது இவ்வழக்கில் புதிய சங்கதியாக நான் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. முன்வழக்கு கோப்புகள், சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களை இவ்வழக்கில் ஆவணங்களாக தாக்கல் செய்ய எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்று சொன்னால் சரிதான். நான் கோரிய வழக்கு பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும், வேலுச்சாமி குடும்பத்தாருக்கு பாத்தியமான சொத்துக்களை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் நான் பொய்யாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.